# வயதுவந்த பங்கேற்பாளர் (வயது 16+) தகவல் தாள் வி8

## 03.10.20

*இந்த தகவல் தாள் இரண்டு பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது. பகுதி1 ஆய்வில் என்ன ஈடுபட்டுள்ளது மற்றும் சேகரிக்கப்பட்ட தகவல்கள் மற்றும் மாதிரிகளை நாங்கள் எவ்வாறு பயன்படுத்துவோம் என்பதை விவரிக்கின்றது. பகுதி 2 அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளைக் விவரிக்கின்றது*

## பகுதி1

## இதில் என்ன ஈடுபட்டுள்ளது?

### ஆய்வு 1) நோய்கள் மற்றும் பிற தகவல்களை பற்றி ஆன்லைனில் தெரிவித்தல்

முதல் படி குடும்பத்தில் உள்ள வயது வந்தவர்கள் அனைவரும் வைரஸ் வாட்சில் பங்கேற்பது குறித்தும், அவர்களது கவனிப்பின் கீழுள்ள குழந்தைகள் பங்கு பெறுவது குறித்தும் மகிழ்ச்சியடைவதை உறுதிப்படுத்த உதவும் ஒரு **ஆன்லைன் பதிவு மற்றும் ஒப்புதல் சர்வேயை** பூர்த்தி செய்வதாகும். தீர்மானிக்க போதுமான வயதுடைய குழந்தைகளும் அவர்கள் ஒப்புக்கொள்கிறார்கள் என்பதைக் காண்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுவார்கள். வீட்டில் குழந்தைகள் இருந்தால் தயவுசெய்து அவர்களுடன் சேர்ந்து குழந்தைகளின் தகவல்

தாளினை படிக்கவும். பதிவு செய்தல் மற்றும் ஒப்புதல் சர்வேயை நிறைவு செய்ய வீட்டிலுள்ள அனைவருக்கும் சுமார் 5 நிமிடங்கள் ஆகும். சர்வேயை எடுப்பதற்கு முன்பு ஒவ்வொருவரின் ஜி.பி. இன் பெயரும் முகவரியும், மேலும் உங்களால் கண்டுபிடிக்க முடிந்தால், அனைவரின் என்.எச்.எஸ் எண்ணும் உங்களிடம் உள்ளதை உறுதிப்படுத்திக் கொள்ளவும். என்.எச்.எஸ் இன் பெரும்பாலான கடிதங்களில் என்.எச்.எஸ் எண் உள்ளது.

பதிவு செய்தல் சர்வே முடிந்த உடனேயே வைரஸ் வாட்ச் வழிநடத்தும் குடும்ப உறுப்பினர் வீட்டில் உள்ள மற்ற உறுப்பினர்களுக்கு வயது, பாலினம், இனம், பிறந்த நாடு, தொழில், நிதி, நாள்பட்ட மருத்துவ நிலைமைகள், மருந்துகள், COVID-19 கொண்டிருந்த ஒருவருடனான முந்தைய தொடர்பு, கோவிட் -19 ஆக இருக்கக்கூடிய முந்தைய அறிகுறிகள் மற்றும் சமூக இடைவெளி மற்றும் கை சுகாதாரம் போன்ற நடத்தைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய **ஆன்லைன் அடிப்படை கேள்விப்பட்டியல்களை** பூர்த்தி செய்ய உதவுவார். இதற்கு ஒவ்வொரு வீட்டு உறுப்பினருக்கும் சுமார் 20 நிமிடங்கள் ஆகும். உங்களுக்குத் தெரிந்தால் வயது வந்தவரின் உயரம் மற்றும் எடை குறித்த பதிவு உங்களிடம் இருப்பதை உறுதி செய்யவும். இது குறித்து உங்களுக்குத் தெரியவில்லை என்றால், அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளின் முடிவில் உள்ள படங்களைப் பயன்படுத்தி உங்கள் உடல் வடிவ வகையைத் தேர்ந்தெடுத்து அதை குறித்து வைத்துக்கொள்ளவும்.

**அனைத்து நோய்களையும் வாராந்திரம் பதிவு செய்தல் -** உங்கள் வீட்டில் யாருக்காவது இருமல் மற்றும் சளி அல்லது கோவிட் தொடர்புடையதாக இருக்கக்கூடிய பிற அறிகுறிகள் இருந்தால், அவர்கள் நோய்வாய்ப்பட்ட ஒவ்வொரு நாளும் (இதற்கு உதவ ஒரு நாட்குறிப்பை வழங்குவோம்) தங்களது அறிகுறிகளை எழுத வேண்டும் (உங்களிடம் ஒரு தர்மாமீட்டர் இருந்தால் அவர்களுடைய உடல் வெப்பநிலை உட்பட). ஒருவருக்கு உடல்நிலை சரியில்லாத ஒவ்வொரு நாளும் இதற்கு ஐந்து நிமிடங்களுக்கும் குறைவாகவே ஆகும். வைரஸ்

வாட்ச் குடும்பத் தலைவர் ஒவ்வொரு வாரமும் யாராவது நோய்வாய்ப்பட்டிருக்கிறார்களா இல்லையா என்று கேட்டு ஒரு மின்னஞ்சல் பெறுவார். பதில் “இல்லை” என்றால் கேள்விப்பட்டியல் முடிவுறும், எனவே பெரும்பாலான நேரங்களில் ஒவ்வொரு வாரமும் இதற்கு பதிலளிக்க ஒரு நிமிடத்திற்கும் குறைவாகவே ஆகும். பதில் ஆம் என்றால், ஆன்லைன் சர்வேயில் நோய்வாய்ப்பட்டவருடைய அறிகுறிகளையும், இந்த நோய்க்கு அவர்கள் சிகிச்சை பெற்றார்களா என்பதையும், தொற்று பரவாமல் தடுக்க வீட்டில் என்ன செய்யப்பட்டது என்பதையும், சில கேள்விகளையும் மற்றும் நோய்க்கு முந்தைய வாரத்தில் வீட்டில் உள்ள வயதுவந்த உறுப்பினர்கள் என்ன செய்தார்கள் என்பது குறித்து பதிவு செய்யுமாறு வைரஸ் வாட்ச் வழிநடத்தும் குடும்ப உறுப்பினரிடம் கேட்கப்படும். இந்த கேள்விகளை நிறைவு செய்ய நோய்வாய்ப்பட்ட ஒவ்வொரு நபருக்கும் பத்து நிமிடங்கள் ஆகும்.

## COVID-19 கட்டுப்பாடுகளின் நடத்தைகள் மற்றும் தாக்கம் குறித்த மாதாந்திர சர்வே

கோவிட் -19 பற்றிய அரசாங்க ஆலோசனைகளுக்கு மக்கள் எவ்வாறு பதில் செயல் புரிகின்றனர் என்பதையும் இந்த அறிவுரை அவர்களுடைய வாழ்க்கையை எவ்வாறு பாதிக்கிறது என்பதையும் நாங்கள் புரிந்து கொள்ள விரும்புகிறோம். இந்த ஆலோசனை ஆய்வின் போது மாறும் என்பதால், இதை மதிப்பிடுவதற்கு மாதாந்திர ஆன்லைன் சர்வே செய்யத் திட்டமிடுகிறோம். எந்தவொரு சர்வேயும் தவறவிடப்பட்டதா, யாராவது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார்களா, சமூக இடைவெளி பற்றிய கேள்விகள், உறுதிப்படுத்தப்பட்ட அல்லது சந்தேகத்திற்கிடமான நபருடன் தொடர்பு கொண்டதைத் தொடர்ந்து சுயமாக தனிமைப்படுத்தும்படி உங்களிடம் கேட்கப்பட்டதா, தொடர்பு கண்காணிப்புக்காக உங்கள் ஃபோனில் நீங்கள் ஒரு என்.எச்.எஸ் பயன்பாட்டைப் பயன்படுத்துகிறீர்களா நீங்கள் கோவிட்- க்கு அல்லது கோவிட் ஆன்டிபாடிகளுக்கு சோதிக்கப்பட்டிருந்தீர்களா என்பதைப் பற்றி இது கேட்கும். கோவிட் ஆலோசனை உங்களை எவ்வாறு பாதிக்கிறது

என்பதைப் பார்க்க உங்கள் தொழில் குறித்த கேள்விகள் இருக்கும். இந்த கேள்விப்பட்டியலுக்கு தலா வீட்டு உறுப்பினருக்கு சுமார் 15 நிமிடங்கள் எடுக்கும்.

வைரஸ் வாட்ச் பங்கேற்பாளர்கள் தங்களுக்கு என்ன கேள்விகள் முக்கியம் என்று எங்களுக்குத் தெரிவிக்க வேண்டும் என விரும்புகிறோம். பல்லாயிரக்கணக்கான உங்கள் சக பங்கேற்பாளர்களின் உதவியுடன், இந்த கேள்விகளுக்கு பதிலளிக்க நாங்கள் உதவ முடியும். நாங்கள் பதிலளிக்க முயற்சி செய்ய விரும்பும் ஒரு கேள்வியை தயவுசெய்து எழுதவும், ஒவ்வொரு மாதமும் நாங்கள் உங்களிடம் மீண்டும் கேட்போம். உங்கள் பதில்களை நாங்கள் படித்து, பங்கேற்பாளர் பரிந்துரைகளின் அடிப்படையில் எங்கள் மாதாந்திர சர்வேயில் ஒரு கேள்வியைச் சேர்க்க ஒவ்வொரு மாதமும் வாக்களிக்க உங்களை அனுமதிப்போம். முக்கியமானது என்று நீங்கள் நினைக்கும் எதுவும் இதில் உள்ளடங்கலாம் எ.கா. சில விஷயங்கள் COVID-19 இன் உங்கள் அபாயத்தை பாதிக்கலாம் அல்லது அதிலிருந்து உங்களைப் பாதுகாக்கலாம் என்று நீங்கள் நினைத்தால் அல்லது கட்டுப்பாட்டு நடவடிக்கைகளின் தாக்கத்தைப் பற்றி நீங்கள் கவலைப்படுகிறீர்களானால், மேலும் நிறைய கண்டுபிடிக்க முயற்சிக்க சர்வேக்களைப் பயன்படுத்தலாம். எங்களால் எல்லா கேள்விகளுக்கும் பதிலளிக்க முடியாது, ஆனால் நாங்கள் எங்களால் முடிந்ததைச் செய்கிறோம்! வைரஸ் வாட்ச் பங்கேற்பாளர்கள் எழுப்பும் பொதுவான கேள்விகளுக்கு பதிலளிக்க முயற்சிக்கும் வழக்கமான செய்திமடலையும் (நியூஸ்லெட்டர்) நாங்கள் தயாரிப்போம்.

## ஆய்வு 2 - மருத்துவ பதிவுகளின் பகுப்பாய்வு

ஜனவரி 2020 முதல் சுவாசத்திற்குரிய வைரஸ்கள் தொடர்பான எந்தவொரு மருத்துவமனை வருகைகளையும், வீட்டில் நிகழ்ந்த எந்தவொரு இறப்புகளையும், ஆய்வின் போது மற்றும் ஆய்வு முடிந்த 5 ஆண்டுகளுக்கு பிறகு அடையாளம் காண உங்கள் மருத்துவ பதிவுகளை

மதிப்பாய்வு செய்ய விரும்புகிறோம். ஏனென்றால், COVID-19 பல ஆண்டுகளுக்கு பரவக்கூடும், மேலும் இந்த ஆண்டு நோய்த்தொற்று ஏற்படுவது எதிர்கால ஆண்டுகளில் ஏற்படும் நோய்களிலிருந்து பாதுகாக்கிறதா என்பதைப் புரிந்து கொள்ள விரும்புகிறோம். கோவிட் -19 எதிர்பாராத நீண்ட கால நோய்களை உருவாக்கலாம், அது நடக்குமா என்பதைக் கண்டுபிடிக்கவும் நாங்கள் விரும்புகிறோம். என்.ஹெச்.எஸ் டிஜிட்டல் மருத்துவமனை வருகைகள் மற்றும் சேர்க்கை (மருத்துவமனை எபிசோட் புள்ளிவிவர தரவு என அழைக்கப்படுகிறது) மற்றும் இறப்புகள் பற்றிய தரவுகளை வைத்திருக்கிறது, மேலும் பப்ளிக் ஹெல்த் இங்கிலாந்து என்.ஹெச்.எஸ் ஆல் மேற்கொள்ளப்படும் வைரலாஜிகல் பரிசோதனை தரவுகளை வழக்கமுறையாக சேகரிக்கிறது. இதிலிருந்து எழும் எந்தவொரு நேர்மறையான முடிவுகள் உட்பட டெஸ்ட் மற்றும் ட்ரேஸ் திட்டத்தின் தரவுகளுடன் நாங்கள் இணைப்பை பெற விரும்புகிறோம். நாங்கள் என்.ஹெச்.எஸ் டிஜிட்டல் மற்றும் பப்ளிக் ஹெல்த் இங்கிலாந்து (பீ.எச்.ஈ) க்கு வைரஸ் வாட்ச் பங்கேற்பாளர்களின் பெயர்கள், பிறந்த தேதிகள், பாலினம், முகவரிகள் மற்றும் கிடைக்கும்போதெல்லாம், என்.ஹெச்.எஸ் எண்களை வழங்குவோம். என்.ஹெச்.எஸ் டிஜிட்டல் மற்றும் பீ.எச்.ஈ எந்தவொரு மருத்துவமனை வருகைகள், சேர்க்கைகள் அல்லது வீட்டில் நிகழும் இறப்புகள் பற்றிய தகவல்களை திருப்பி வழங்கும். தரவை பகுப்பாய்வு செய்யும் நபர்கள் பங்கேற்பாளர்களை அடையாளம் காண முடியாத வகையில் அடையாளங்காட்டிகளை அகற்றுவதற்கு முன் இந்த தரவுகள் வைரஸ் வாட்ச் தரவுத்தொகுப்போடு இணைக்கப்படும்.

## ஆய்வு 3 - மக்கள் COVID-19 ஆல் பாதிக்கப்பட்டுள்ளார்களா என்று சொல்லும் ஸ்வாபிங் ஆய்வு

உங்களுக்கு ஒரு சுவாச நோய் அனுபவம் ஏற்படும் போது நீங்கள் COVID-19 (அல்லது வேறு வகையான சுவாச நோய்த்தொற்று) நோயால் பாதிக்கப்பட்டுள்ளீர்களா என்பதைக் கண்டறிய நாங்கள் ஆய்வு செய்யும் வைரஸ் வாட்ச் பங்கேற்பாளர்களின் சிறிய குழுவின் ஒரு பகுதியாக உங்கள் வீட்டில் உள்ளவர்கள் **தேர்ந்தெடுக்கப்படலாம்**. உங்கள் **மூக்கு மற்றும் தொண்டை ஸ்வாப்களை சோதிப்பதன் மூலம் நாங்கள்**

**இதைச் செய்கிறோம்.** பங்கேற்பதற்காக நாங்கள் உங்களை அழைத்தால், வீட்டிலுள்ள அனைவரும் மூக்கு / தொண்டை ஸ்வாப் சமர்ப்பிக்க ஒப்புக் கொள்ள வேண்டும். ஆய்வின் தொடக்கத்தில், சில மூக்கு மற்றும் தொண்டை ஸ்வாப்களைக் கொண்ட ஒரு **வீட்டுப் பேக்** ஐ உங்களுக்கு அனுப்புவோம். ஸ்வாப்கள் குறைவாக கிடைப்பதால், இவற்றில் சிலவற்றை நாங்கள் பின்னர் அனுப்பலாம். நீங்கள் பயன்படுத்த தயாராகும் வரை தயவுசெய்து அவற்றை குளிர்ந்த உலர்ந்த இடத்தில் வைக்கவும். அவை அறிவுறுத்தல்களுடன் வரும்- நீங்களே ஸ்வாப் எடுத்துக் கொள்ளலாம் அல்லது குடும்ப உறுப்பினர் ஒருவர் அதை உங்களுக்காகச் செய்யலாம். ஒரு மாதிரியை எடுப்பது சிக்கலற்றதாகும் மற்றும் வலியை ஏற்படுத்தாது. நீங்கள் மாதிரியை எடுக்கும் நாளன்றோ அல்லது மறுநாளோ எங்களுக்கு அனுப்ப வேண்டிய அனைத்து பேக்கேஜிங்கையும் நாங்கள் இலவசமாக வழங்குவோம். நாங்கள் உங்களுக்கு மாற்று ஸ்வாப்களை அனுப்புவோம், இதனால் நீங்கள் எப்போதும் வீட்டிலேயே சிலவற்றை வைத்திருக்கலாம்.

**உங்கள் குடும்பத்தினர் பின்வரும் மூன்று குழுக்களில் ஒன்றில் சேர கேட்டுக்கொள்ளப்படலாம்:**

**குழு 1:** பின்வரும் அறிகுறிகளில் எதையேனும் தொடர்ச்சியாக 2 நாட்கள் நீங்கள் எப்போது அனுபவித்தாலும், மூக்கு / தொண்டை ஸ்வாப்-ஐ சமர்ப்பிக்கவும்: காய்ச்சல், அல்லது இருமல், அல்லது வாசனை அல்லது சுவை இழப்பு / மாற்றம், மூச்சுத் திணறல், அல்லது காது வலி, அல்லது தொண்டை கரகரப்பு, அல்லது தும்மல் , அல்லது மூக்கடைப்பு, அல்லது மூக்கு ஒழுகல், அல்லது மூச்சுத்திணறல்.

**மக்களை கோவிட் -19 எவ்வளவு அடிக்கடி பாதிக்கிறது என்பதைக் கண்டறிய இந்த குழு எங்களுக்கு உதவும்.**

**குழு 2:** உங்களுக்கு பின்வருபவை உட்பட ஒரு புதிய நோய் எப்போது ஏற்பட்டாலும் மூக்கு / தொண்டை ஸ்வாப்-ஐ சமர்ப்பிக்கவும்:

- ஒன்று - தொடர்ந்து இரண்டு நாட்கள் சுவாச அறிகுறிகளின் (எ.கா. இருமல், மூச்சுத் திணறல், தொண்டை கரகரப்பு, மூக்கு ஒழுகல், மூக்கடைப்பு, தும்மல், சுவை அல்லது வாசனை உணர்வு இழப்பு அல்லது மாற்றப்பட்டது).
- அல்லது - தொடர்ந்து இரண்டு நாட்கள் இரைப்பை குடல் அறிகுறிகள் (எ.கா. வயிற்றுப்போக்கு / தளர்வான மலம், அடிவயிற்று வலி, குமட்டல் அல்லது வாந்தியெடுத்தல், பசியிழப்பு).
- அல்லது - தொடர்ந்து இரண்டு நாட்கள் பொதுவான நோய்த்தொற்று அறிகுறிகள் ( எ.கா. காய்ச்சல் உணர்வு, அதிக உடல் வெப்பநிலை, கடுமையான விவரிக்கமுடியாத சோர்வு, பொதுவான தசை அல்லது மூட்டு வலிகள்)

**தேசிய கேஸ் வரையறைகள் பெரும்பாலான கேஸ்களை கண்டறிகிறதா அல்லது பிற அறிகுறிகள் உள்ளடக்கப்பட வேண்டுமா என்பதை அறிய இந்த குழு எங்களுக்கு உதவும்.**

**குழு 3:** தொடர்ந்து இரண்டு நாட்கள் காய்ச்சல் அல்லது இருமல் அல்லது சுவை அல்லது வாசனை உணர்வு இழப்பு அல்லது மாற்றப்பட்டது ஆகியவற்றை நீங்கள் எப்போது அனுபவித்தாலும் மூக்கு / தொண்டை ஸ்வாப்-ஐ சமர்ப்பிக்கவும். அதே நாளில் வீட்டில் உள்ள அனைவருக்கும் ஸ்வாப் டெஸ்ட் எடுக்கப்பட வேண்டும் என நாங்கள் விரும்புகிறோம். நீங்களோ அல்லது உங்கள் வீட்டு உறுப்பினரோ நேர்மறையான சோதனை முடிவைப் பெற்றால், நீங்கள் அனைவரும் முடிவின் நாளன்றும் 7 நாட்களுக்குப் பிறகும் ஸ்வாப் சோதனை செய்துகொள்ள வேண்டுமென விரும்புகிறோம். அறிகுறிகள் ஏற்படுவதற்கு முன்பு COVID-19 பரவுவது, மற்றும் எந்தவொரு அறிகுறியற்ற தொற்றுநோயையும் பற்றிய முக்கியமான தகவல்களையும் இது வழங்கும்.

**கோவிட் -19 வீட்டிலுள்ள மற்றவர்களுக்கு எவ்வளவு எளிதில் பரவுகிறது, அறிகுறிகள் இல்லாத நோய்த்தொற்றின் முக்கியத்துவம் மற்றும் நோய்த்தொற்றைத் தொடர்ந்து ஆண்டிபாடிகளின் வளர்ச்சி அல்லது தொற்றுநோக்கு வெளிப்படுதல் ஆகியவற்றைப் புரிந்துகொள்ள இந்த குழு நமக்கு உதவும்.**

**மாதிரிகள் மற்றும் சோதனை முடிவுகளுக்கு என்ன நடக்கும்?**

சோதனை திறனை விரிவுபடுத்துவதற்காக யு.சி.எல்.எச் மற்றும் ஹெல்த் சர்வீசஸ் ஆய்வகம் பிரான்சிஸ் கிரிக் நிறுவனத்துடன் ஒன்றிணைகிறது, மேலும் இந்த ஒன்றிணைதலின் மூலம் மாதிரிகள் செயலாக்கப்படும். ஸ்வாபிலிருந்து பெறப்படும் மாதிரிகளை கோவிட் - 19 க்காக எங்களால் முடிந்தவரை விரைவில் சோதித்து, உங்கள் முடிவுகளை உங்களுக்குத் தெரிவிப்போம். இருப்பினும், மருத்துவ அல்லது பொது சுகாதார நோக்கங்களுக்காக ஸ்வாப்கள் எடுக்கப்பட்டவுடன் விரைவாக முடிவுகள் கிடைக்காது என்பதை ஏற்றுக்கொள்வது முக்கியமாகும். மேலும், பங்கேற்பாளர்களால் எடுக்கப்படும் ஸ்வாப்கள் சுகாதாரப் பணியாளர்களால் எடுக்கப்படும் ஸ்வாப்களைக் காட்டிலும் சற்றே குறைவான துல்லியத்தன்மையுடன் இருக்கலாம் - எனவே சில நோய்த்தொற்றுகள் தவறவிடப்படக்கூடும். இந்த காரணங்களுக்காக **வைரஸ் வாட்ச் ஸ்வாப்கள் உங்களுக்கு என்.எச்.எஸ் வழங்கிய ஸ்வாப்களுக்கு மாற்றாது** என்பதை புரிந்து கொள்வது மிகவும் முக்கியம். **வைரஸ் வாட்ச் ஆய்வுக்கு வழங்கப்பட்ட எந்தவொரு ஸ்வாப்களுக்கும் கூடுதலாக சோதனைக்கு சாதாரண மருத்துவ (என்.எச்.எஸ்) அல்லது பொது சுகாதார ஆலோசனையை தயவுசெய்து பின்பற்றவும்** .

முடிவுகள் உரை செய்தி (மெசேஜ்) மற்றும் / அல்லது மின்னஞ்சல் மூலம் உங்களுக்குத் தெரிவிக்கப்படும். சோதனை முடிவு குறித்து விளக்கி நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதற்கான சமீபத்திய ஆலோசனையை வழங்கும் எங்கள் வலைத்தளத்தில் தரநிலையான இன்றுவரையிலான தகவல்களை நீங்கள் காணலாம். நேர்மறையான COVID-19 சோதனை முடிவுகளை பப்ளிக் ஹெல்த் இங்கிலாந்துக்கு அறிவிக்க நாங்கள் சட்டப்பூர்வ கடமைக்கு உட்பட்டுள்ளோம். என்.எச்.எஸ் இல் செயலாக்கப்பட்ட நேர்மறை மாதிரிகளை குறித்து

தெரிவிக்கப் பயன்படுத்தப்படும் அதே தானியங்கி செயல்முறை மூலம் இது செய்யப்படும்.

ஒரு ஸ்வாபில் COVID-19 அடையாளம் காணப்படும்போது, வைரஸின் மரபியல்சார்ந்த வரிசைமுறையை நாங்கள் மேற்கொள்வோம். இது வைரஸின் சில விகாரங்கள் மக்களை மேலும் நோய்வாய்ப்படுத்துகிறதா என்பதைப் புரிந்துகொள்வதற்கு முக்கியமானதாக இருக்கும் வகையில் வைரஸின் முழு மரபியல்சார்ந்த குறியீட்டையும் பார்க்க உதவுகிறது. ஒரு வீட்டில் ஒன்றுக்கு மேற்பட்ட நபர்கள் கோவிட் -19 உடன் நோய்வாய்ப்பட்டால், இந்த வைரஸ் மரபியல்சார்ந்த சோதனை ஒரு நபரிடமிருந்து மற்றவருக்கு நோய்த்தொற்று ஏற்படுத்தியதா அல்லது வீட்டுக்கு வெளியில் இருந்து நோய்த்தொற்றுகள் பரவியதா என்பதைப் புரிந்துகொள்ள உதவும். கண்டுபிடிப்புகளை விளக்குவது கடினம் என்பதால் இந்த முடிவுகளை நாங்கள் உங்களுக்கு தெரிவிக்க மாட்டோம் மற்றும் இதனால் உங்கள் கவனிப்பு மாற்றப்படாது.

கோவிட் -19 க்கான மாதிரிகள் சோதனை செய்யப்படுவதோடு கூடுதலாக, சளி மற்றும் ரைனோவைரஸ், பருவகால கொரோனா வைரஸ் மற்றும் இன்ஃப்ளுயன்ஸா உள்ளிட்ட ஃப்ளு போன்ற நோய்களை ஏற்படுத்தும் பிற சுவாச நோய்த்தொற்றுகளின் பகுப்பாய்வுக்காக மாதிரிகள் சேமிக்கப்படும். ஆய்வின் இறுதி வரை இவை சோதிக்கப்படாது மற்றும் இந்த முடிவுகளை நாங்கள் தெரிவிக்க மாட்டோம்.

## ஆய்வு 4 - மக்களுக்கு கோவிட் -19 க்கான நோய் எதிர்ப்பு சக்தி உருவாகியுள்ளதா என்பதை அறிய நோய் எதிர்ப்பு சக்தி ஆய்வு

மேலே விவரிக்கப்பட்டுள்ள மூன்று ஸ்வாபிங் ஆய்வுக் குழுக்களில் ஏதேனும் ஒன்றில் பங்கேற்க உங்கள் குடும்பத்தினர் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தால், கோவிட் -19 மற்றும் பிற பொதுவான சுவாச நோய்த்தொற்றுகளுக்கான நோய் எதிர்ப்பு சக்தி குறித்த ஆய்வில் நீங்கள் பங்கேற்க வெண்டும் என விரும்புகிறோம். கோவிட் -19 நோயால் எத்தனை பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதையும், மக்கள் மீண்டும் நோய்த்தொற்றால் பாதிக்கப்படுவதை தடுக்கும் வகையில்

நோய்த்தொற்றானது பாதுகாப்பு நோய் எதிர்ப்பு சக்திக்கு வழிவகுக்கிறதா என்பதையும் புரிந்துகொள்வது மிகவும் முக்கியமாகும். இதைச் செய்ய நாங்கள் சிறிய அளவிலான இரத்தத்தை எடுக்க வேண்டும் (உங்கள் மருத்துவர் உங்களிடம் இரத்த பரிசோதனை செய்யச் சொல்வதைப் போன்றது). இந்த இரத்தம் COVID-19 க்கான ஆண்டிபாடிகளுக்கும், நோயெதிர்ப்பு பதிலின் பிற அம்சங்களுக்காகவும் சோதிக்கப்படுகிறது.

2020ஆம் ஆண்டின் இலையுதிர்காலத்திலும், 2021ஆம் ஆண்டின் வசந்த / கோடைகாலத்திலும் ஒரு உள்ளூர் கிளினிக்கிற்கு வருமாறு உங்களை அழைப்போம், அங்கு ஒரு பயிற்சி பெற்ற செவிலியர், மருத்துவர் அல்லது ஃபிளெபோடோமிஸ்ட் (இரத்தமெடுப்பதில் நிபுணத்துவம் வாய்ந்த ஒரு நிபுணர்) வயதுவந்தவர்களிடமிருந்தும், ஒப்புக் கொள்ளும் குழந்தைகளிடமிருந்தும் இரத்த மாதிரிகளை எடுப்பார்.

### எவ்வளவு இரத்தம்?

வயதுவந்தவர்கள் (16 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடையவர்கள்) - 30 மிலி (2 x 5 மிலி, 2 x 10 மிலி குழாய்கள் சுமார் 6 டீஸ்பூனுக்கு சமமானது),
15 வயது மற்றும் அதற்கு குறைந்த வயதுடைய குழந்தைகளிடமிருந்து 15 மிலி (1 x 5 மிலி, 1 x 10 மிலி குழாய்கள் - 3 டீஸ்பூனுக்கு சமமானது) எடுப்போம்.

குழந்தைகளிடமிருந்து இரத்தமெடுப்பவர்களுக்கு இதைச் செய்வதில் பயிற்சி மற்றும் அனுபவம் இருக்கும். எந்தவொரு அசௌகரியத்தையும் குறைக்க அந்தப் பகுதியை மரத்துப்போகச் செய்யும் குறிப்பிட்ட உணர்வு நீக்கி கிரீமை நாங்கள் வழங்குவோம்.

வீட்டு உறுப்பினர்கள் அனைவரும் கலந்துகொண்டு அவர்களின் இரத்தத்தை ஒரே நேரத்தில் (முடிந்தால்) எடுத்துக்கொள்ள விரும்புகிறோம் மேலும் உங்கள் பயணச் செலவுகளை ஈடுசெய்ய ஆன்லைன் வவுச்சர் ஒன்றை உங்களுக்கு வழங்குவோம் (தயவுசெய்து மின்னஞ்சல் அனுப்பவும் viruswatch@ucl.ac.uk). **15 அல்லது அதற்கும்**

**குறைவான வயதுள்ள குழந்தைகள் இரத்த மாதிரியை கொடுக்க ஊக்குவிக்கப்படுகிறார்கள், ஆனால் அவர்கள் இரத்த மாதிரி எடுப்பதை விரும்பவில்லை என்றாலும் கூட ஆய்வில் பங்கேற்கலாம்.** மேலும் இரத்த மாதிரியை வழங்க விரும்பாத குழந்தைகளுக்கு அல்லது அவர்களின் இரத்தமெடுக்கும் கிளினிக்கில் குழந்தைகளின் இரத்தத்தை எடுப்பதில் பயிற்சி பெற்ற ஒரு பணியாளர் உறுப்பினர் இல்லை என்றால் கைவிரல் குத்தல் ஆண்டிபாடி சோதனைகளை நாங்கள் வழங்குவோம். இதில் சோதனை கேசட்டில் ஒரு துளி இரத்தம் ஒரு காகிதத்தில் சேகரிக்கப்படுகிறது. இந்த முறையைப் பயன்படுத்தி செய்யப்படும் சோதனைகள் முழு இரத்த மாதிரியைப் போல துல்லியமாக இருக்காது, ஆனாலும் மதிப்புமிக்க தகவல்களை வழங்கும். இரத்த மாதிரியை வரைய முடியாத வயதுவந்தவர் எவருக்கும் கைவிரல் குத்தல் ஆண்டிபாடி சோதனைகள் வழங்கப்படும்.

**நீங்கள் கீழே பட்டியலிடப்பட்ட குழுக்களில் ஏதேனும் ஒன்றில் இருந்தால், ஒரு பயிற்சி பெற்ற செவிலியர், மருத்துவர் அல்லது ஃபிளெபோடோமிஸ்ட் (இரத்தமெடுப்பதில் நிபுணத்துவம் வாய்ந்த ஒரு நிபுணர்) இரத்த மாதிரிகள் எடுக்க உங்கள் வீட்டிற்கு வர முன்வருவார்.** நீங்கள் விரும்பினால், நீங்கள் கிளினிக்கிற்கு வருகை தருவதையும் தேர்வு செய்யலாம், மேலும் வருகையின் போது இரத்த மாதிரியை எடுத்துக் கொள்ளும் நபரைத் தவிர வேறு யாருடனும் நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டியதில்லை என்பதை நாங்கள் உறுதிசெய்வோம். இரத்த மாதிரியை எடுக்கும் நபருக்கு COVID-19 அறிகுறிகள் எதுவும் இருக்காது மற்றும் நீங்கள் பாதுகாப்பாக இருப்பதை உறுதிசெய்ய முகமூடி (மாஸ்க்) உள்ளிட்ட தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்களை அணிவார்கள்.

- 70 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடையவர்கள் (மருத்துவ நிலைமைகளைப் பொருட்படுத்தாத)

- கீழே பட்டியலிடப்பட்டுள்ள அடிப்படை உடல்நல நிலைமை கொண்டுள்ள 70 வயதிற்கு உட்பட்டவர்கள் (அதாவது மருத்துவ அடிப்படையில் வயது வந்தவர்களாக ஒவ்வொரு ஆண்டும் ஒரு காய்ச்சல் தடுப்பூசியைப் பெற அறிவுறுத்தப்படும் எவரும்):
- ஆஸ்துமா, நாட்பட்ட நுரையீரல் அடைப்பு நோய் (சி.ஓ.பீ.டி), எம்ஃபைசிமா அல்லது மூச்சுக்குழாய் அழற்சி போன்ற, நாட்பட்ட (நீண்ட கால) லேசானது முதல் மிதமானது வரையிலான சுவாசத்துக்குரிய நோய்கள்
- இதய செயலிழப்பு போன்ற நாள்பட்ட இதய நோய்,
- நாள்பட்ட சிறுநீரக நோய்
- ஹெபடைடிஸ் போன்ற நாள்பட்ட கல்லீரல் நோய்
- பார்கின்சன்'ஸ் நோய், மோட்டார் நியூரோன் நோய், மல்டிபிள் ஸ்க்ளிரோசிஸ் (எம்எஸ்), ஒரு கற்றல் இயலாமை அல்லது பெருமூளைக்குரிய வாதம் போன்ற நாள்பட்ட நரம்பியல் நிலைமைகள்
- நீரிழிவு நோய்
- எச்ஐவி மற்றும் எய்ட்ஸ் போன்ற நிலைமைகள், அல்லது ஸ்டீராய்டு மாத்திரைகள் போன்ற மருந்துகளின் விளைவாக ஒரு பலவீனமான நோயெதிர்ப்பு மண்டலம்
- மிக அதிக உடல்எடையுடன் இருப்பது (40 அல்லது அதற்கு மேற்பட்ட உடல் நிறை குறியீட்டெண் (பிஎம்ஐ))
- கர்ப்பமாக இருப்பவர்கள்

நீங்கள் பின்வரும் வகையினங்களில் ஒன்றில் இருந்தால், நீங்கள் COVID-19 க்கு **மிகவும் தாக்குதலுக்காளாகக்கூடியர் என்று சொல்லும்** மேலும் தொற்றுநோயைத் தடுக்க கவசம் அணியும்படி கேட்டுக்கொள்ளும் ஒரு ஜி.பி. கடிதத்தைப் பெற்றிருக்க வேண்டும். நீங்கள் இந்த குழுவில் இருந்தால், **இரத்த மாதிரியை எடுத்துக்கொள்ள நாங்கள் கேட்டுக்கொள்ள மாட்டோம்,** ஆனால் கைவிரல்-குத்தல் ஆண்டிபாடி பரிசோதனையை வழங்குமாறு நாங்கள் உங்களிடம் கேட்கலாம்.

- புற்றுநோயால் பாதிக்கப்பட்டு செயல்படும் கீமோதெரபி அல்லது கதிரியக்க சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டவர்கள்
- ஒரு உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை செய்துகொண்டவர்கள் மற்றும் தொடர்ந்து நோயெதிர்ப்பு தடுப்பு மருந்துகளை எடுத்துக்கொள்பவர்கள்
- லுகேமியா போன்ற ரத்த புற்றுநோய் அல்லது எலும்பு மஜ்ஜை உள்ள சிகிச்சையின் எந்த கட்டத்திலும் இருப்பவர்கள்
- சிஸ்டிக் ஃபைப்ரோஸிஸ் அல்லது கடுமையான ஆஸ்துமா போன்ற கடுமையான மார்பு நிலைமைகளைக் கொண்டவர்கள் (மருத்துவமனையில் சேர்க்கப்படுதல் அல்லது ஸ்டீராய்டு மாத்திரைகளின் கோர்ஸ் தேவைப்படும்)
- கடுமையான சிறுநீரக நோய் (டயாலிசிஸ்) போன்ற உடல் அமைப்புகளின் கடுமையான நோய்களைக் கொண்டவர்கள்

**காலப்போக்கில் COVID-19 க்கான நோய் எதிர்ப்பு சக்தி குறித்த கைவிரல் குத்தல் ஆய்வு**

கோவிட் -19 க்கான நமது நோய் எதிர்ப்பு சக்தி காலப்போக்கில் எவ்வாறு குறையலாம் என்பதைப் புரிந்துகொள்வதிலும் நாங்கள் ஆர்வமாக இருக்கிறோம். ஸ்வாபிங் ஆய்வில் பங்கேற்காத குடும்பத்தினர்களின் குழு, 2020 இலையுதிர்காலத்தில் வீட்டிலும், மீண்டும் 2021 வசந்த காலத்திலும் ஒரு கைவிரல் குத்தல் ஆண்டிபாடி பரிசோதனை செய்துகொள்ள அழைக்கப்படுவார்கள்.

**ஸ்வாபிங் ஆய்வு குழு மூன்றில்** , பங்கேற்க உங்கள் குடும்பத்தினர் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தால், உங்கள் இரத்தத்தை எடுக்கும் அதே நேரத்தில் (இலையுதிர் காலம் 2020), மற்றும் உங்கள் வீட்டில் உள்ள யாருக்காவது COVID-19 நாசி / தொண்டை ஸ்வாப் சோதனை முடிவு நேர்மறையாக இருந்தால் அதற்கு 14 நாட்களுக்குப் பிறகும் வீட்டில் உள்ள அனைவரும் கைவிரல் குத்தல் ஆண்டிபாடி பரிசோதனையை செய்துகொள்ளுமாறு நாங்கள் கேட்டுக்கொள்வோம். கைவிரல் குத்தல் ஆண்டிபாடி சோதனைக் கிட்கள் அறிவுறுத்தல்கள் மற்றும் செயல்விளக்க வீடியோவுக்கான இணைப்புடன் உங்கள் வீட்டுக்குரிய பேக்குகளில் வழங்கப்படும். உங்கள் சோதனையின் புகைப்படத்தை

எடுத்து, நாங்கள் வழங்கும் பாதுகாப்பான வலை முகவரி மூலம் அதை யு.சி.எல் இல் நீங்கள் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

**இரத்த மாதிரிகள் மற்றும் சோதனை முடிவுகளுக்கு என்ன ஆகும்?**

நோயெதிர்ப்பு பதில்செயல் மற்றும் COVID-19 பாதிப்புக்குள்ளாகும் தன்மை ஆகியவற்றிற்காக இரத்த மாதிரிகளை பிரான்சிஸ் கிரிக் நிறுவனம் பகுப்பாய்வு செய்யும். இந்த நேரத்தில் அறியப்படாத மிக முக்கியமான கேள்விகளில் ஒன்று, எத்தனை பேர் கோவிட் -19 நோயால் ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதுதான். நாட்டின் பல்வேறு பகுதிகளிலும், வெவ்வேறு மக்கள் குழுக்களிலும் இதற்கான பதிலைக் கண்டுபிடிப்பதற்கு உங்கள் மாதிரிகள் எங்களுக்கு முக்கியமானதாக இருக்கும்.

கோவிட் -19 க்கான ஆண்டிபாடி சோதனைகள் பற்றியும், மக்களுக்கு "நோய் எதிர்ப்பு சக்தி" சான்றிதழ்களை வழங்க இவை எவ்வாறு பயன்படுத்தப்படலாம் என்பதையும் நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். ஒரு நேர்மறையான சோதனை என்பது எதிர்கால நோய்த்தொற்றிலிருந்து நீங்கள் பாதுகாக்கப்படுகிறீர்கள் என்று நம்புவதற்கு COVID-19 பற்றி தற்போது போதுமானதாக அறியப்படவில்லை. அதேபோல், கோவிட் -19 நோயால் பாதிக்கப்பட்ட ஆனால் குறைந்த அளவு ஆண்டிபாடி உள்ளவர்களுக்கு சோதனை முடிவு எதிர்மறையாக இருக்கலாம். எந்த ஆண்டிபாடி சோதனைகள் மிகவும் துல்லியமானவை என்பதை மதிப்பீடு செய்வதற்கான பணிகள் இன்னும் நடந்து கொண்டிருக்கின்றன, மற்றும் உங்கள் மாதிரிகள் இந்த பணிக்கு உதவும் . உங்கள் சோதனை முடிவுகள் (உங்கள் முழு இரத்த மாதிரியிலிருந்தும்) கிடைக்கும்போது, கண்டுபிடிப்புகளை விளக்குவதற்கு உங்களுக்கு உதவக்கூடிய சிறந்த ஆதாரங்களின் அடிப்படையில் தகவல்களையும் சேர்த்து நாங்கள் உங்களுக்கு வழங்குவோம்.

ரைனோவைரஸ், பருவகால கொரோனா வைரஸ் மற்றும் இன்ஃப்ளூயன்ஸா உள்ளிட்ட சளி மற்றும் ஃப்ளூ காய்ச்சல் போன்ற நோய்களை ஏற்படுத்தும் பிற பொதுவான சுவாச நோய்த்தொற்றுகளுக்கு நோயெதிர்ப்பு பதில் மற்றும் பாதிப்புக்குள்ளாகும் தன்மை ஆகியவற்றை பின்னர் பரிசோதிக்க மாதிரிகள் சேமிக்கப்படும். சுவாசத்துக்குரிய

நோயை ஏற்படுத்துவதைத் தவிர வேறு நோய்த்தொற்றுகளுக்கு மாதிரிகள் பயன்படுத்தப்படாது.

நமது உடல்கள் பல்லாயிரக்கணக்கான புரதங்களை உருவாக்குகின்றன, அவற்றின் வடிவங்கள் நமது மரபணுக்களாலும் நமது சுற்றுச்சூழலினாலும் தீர்மானிக்கப்படுகின்றன. இந்த புரதங்களில் சுமார் 5000, மக்கள் நோய்வாய்ப்படுகிறார்களா இல்லையா என்பது தொடர்பானது என்று ஆராய்ச்சி காட்டுகிறது. நவீன சோதனைகள் இந்த புரதங்கள் அனைத்தையும் சோதிக்க இரத்த மாதிரிகளைப் பயன்படுத்தலாம். இதைப் புரிந்துகொள்வது மக்களை நோய்களிலிருந்து எவ்வாறு பாதுகாப்பது மற்றும் புதிய சிகிச்சைகளை எவ்வாறு உருவாக்குவது என்பதற்கான வழிகாட்டும் குறிப்புகளை அளிக்கலாம். இந்த வகையான ஆராய்ச்சி "புரோட்டியோமிக்ஸ்" ஆராய்ச்சி என்றழைக்கப்படுகிறது. COVID-19 நோயால் பாதிக்கப்படும்போது சிலருக்கு ஏன் கடுமையாக நோய் பாதிப்பு ஏற்படுகிறது மற்றும் சிலருக்கு எந்த பாதிப்பும் ஏற்படுவதில்லை என்பதைப் புரிந்து கொள்ள பயன்படுத்துவதற்காக இரத்த மாதிரிகளில் ஒன்று இந்த வகையான ஆராய்ச்சிக்காக சேமிக்கப்படும். இந்த சோதனைகளின் முடிவுகள் குறித்து உங்களுக்கு **தெரிவிக்கப்படாது** .

### ஆய்வு 5) நடமாட்ட கண்காணிப்பு - இதன் மூலம் வீட்டிற்கு வெளியே நடமாடுபவர்ளுக்கு அவர்களது இயக்கங்கள் COVID-19 ஏற்படும் அபாயத்தை எவ்வாறு பாதிக்கின்றன என்பதை நாம் புரிந்து கொள்ளலாம்

நீங்கள் உங்கள் இயல்பான செயல்பாடுகளை செய்யும்போது நடமாட்ட தரவை ஆய்வு செய்ய நாங்கள் விரும்புகிறோம். வயதுவந்த பங்கேற்பாளர்கள் தங்கள் ஃபோனில் “டிராக்கர் ஃபார் ஆர்க்ஜி.ஐ.ஸ்” எனப்படும் இலவச நடமாட்டம் கண்காணிக்கும் பயன்பாட்டைப் பதிவிறக்கம் செய்ய கேட்டுக்கொள்ளப்படுவார்கள். இந்த பயன்பாடு மொபைல் ஃபோன்களின் இருப்பிடத்தை பதிவுசெய்கிறது மற்றும் ஃபோனின் ஜி.பி.எஸ் சென்சார் மற்றும் வைஃபை மற்றும் புளூடூத் ஹாட் ஸ்பாட்களுக்கான அருகாமையைப் பயன்படுத்தி பின்னணியில் இயங்குகிறது. இது குறைந்தபட்ச பேட்டரி ஆயுளைப் பயன்படுத்த வடிவமைக்கப்பட்டுள்ளது மற்றும் நீங்கள் ஒரு வைஃபை

நெட்வொர்க்குடன் இணைக்கப்படும்போது தரவை மாற்றுவதற்காக கட்டமைக்கப்பட்டுள்ளது, எனவே இது உங்கள் ஃபோனில் அனுமதிக்கப்பட்ட தரவு வரம்புகளைப் பயன்படுத்தாது.

சமூக இடைவெளி ஆலோசனை எந்த அளவிற்கு மக்களின் நடமாட்டங்களை பாதிக்கிறது என்பதைப் பற்றி நன்கு புரிந்துகொள்ள தரவு எங்களுக்கு உதவும். மற்ற நேரங்களுடன் ஒப்பிடும்போது நோய்த்தொற்றுகளுக்கு முந்தைய வாரத்தில் மக்கள் பொது இடங்களுக்கு எந்த அளவிற்கு சென்றிருந்தார்கள் என்பதைப் புரிந்துகொள்ளவும் நாங்கள் தரவைப் பயன்படுத்துவோம். எந்த வகையான செயல்பாடுகள் (எ.கா. வேலைக்குச் செல்வது, ஷாப்பிங், தியேட்டர்கள், சினிமாக்கள், பெரிய விளையாட்டு இடங்கள், சுற்றுலா தலங்கள், பப்கள், கிளப்புகள், கஃபேக்கள் மற்றும் உணவகங்கள், பொது போக்குவரத்தைப் பயன்படுத்துதல் அல்லது உடற்பயிற்சி செய்தல்) நோய்த்தொற்றின் அபாயத்தை அதிகரிக்கின்றன என்பதைப் புரிந்துகொள்ள இது எங்களுக்கு உதவும். தங்களுடைய பணிக்காக வீட்டிலிருந்து வெளியே செல்ல வேண்டிய நபர்கள் தொற்றுநோய்க்கான அதிக ஆபத்தில் இருக்கிறார்களா என்பதைப் புரிந்துகொள்ளவும் இந்த தகவல்கள் எங்களுக்கு உதவும். மாசு மற்றும் தட்பவெப்ப நிலை மாறுபாடுகளுக்கு வெளிப்படுவதன் அளவை கவனிப்பதிலும் நாங்கள் ஆர்வமாக உள்ளோம். இறுதியாக, மக்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் நோய்வாய்ப்பட்டிருக்கும்போது அவர்கள் வீட்டில் தங்கியிருக்கிறார்களா என்பதைப் பார்க்க நாங்கள் ஆர்வமாக உள்ளோம்.

இந்த கேள்விகளுக்கு பதிலளிக்க எங்களுக்கு உதவ, பங்கேற்பாளர்கள் ஆய்வின் காலத்திற்கு (12 மாதங்கள்) பயன்பாட்டை “ஆன்” செய்து வைத்துக்கொள்ள வேண்டும் என விரும்புகிறோம், இருப்பினும், ஆன் / ஆஃப் சுவிட்சை நீங்கள் கட்டுப்படுத்தலாம். ஆய்வின் முடிவில், நாங்கள் உங்களுக்கு நினைவூட்டலை அனுப்புவோம், உங்கள் ஃபோனிலிருந்து நீங்கள் அதை நீக்கலாம்.

நடமாட்டம் குறித்த தரவு மிகவும் ரகசியத்தன்மையுடையது என்பதை நாங்கள் அறிவோம், மேலும் உங்களிடமிருந்து நாங்கள் சேகரிக்கும் மற்ற எல்லா தரவையும் சேர்த்து மிக அதிக தரவு பாதுகாப்பை உறுதி

செய்வோம். நடமாட்ட கண்காணிப்பு ஆய்வில் பங்கேற்க நீங்கள் தேர்வுசெய்தால், யு.சி.எல் ஆய்வுக் குழு உங்கள் டிராக்கர் அக்கவுண்ட்டை அமைப்பதற்காக உங்கள் பயனர் சுயவிவரத் (ப்ரொ:ைபைல்) தகவல்களை (முதல் பெயர், குடும்பப்பெயர் மற்றும் மின்னஞ்சல் முகவரி) ஒரு ஆர்க் ஜி.ஐ.ஸ் ஆன்லைன் சந்தாவில் (வட அமெரிக்க சேவையகத்தில் ஹோஸ்ட் செய்யப்பட்டது) பதிவேற்றம் செய்யும். பயன்பாட்டை எவ்வாறு பதிவிறக்கம் செய்து உள்நுழைவது என்பதற்கான வழிமுறைகளை யு.சி.எல் ஆய்வுக் குழு உங்களுக்கு மின்னஞ்சல் செய்யும். உங்கள் டிராக்கர் பயன்பாட்டுக் கணக்கை உருவாக்குவதில் யு.சி.எல் ஆய்வுக் குழுவிற்கு உதவும் ஒரே நோக்கத்திற்காக பெயரிடப்பட்ட சிறிய எண்ணிக்கையிலான ஈ.எஸ்.ஆர்.ஐ பணியாளர்கள் (ஆர்க் ஜி.ஐ.ஸ் டிராக்கர் பயன்பாட்டை இயக்கும் நிறுவனம்) உங்கள் பயனர் சுயவிவரத் தரவை அணுகலாம். நீங்கள் பயன்பாட்டைப் பயன்படுத்தத் தொடங்கியவுடன், உங்கள் புவியியலுக்குரிய இருப்பிடத் தரவு 3 நாட்களுக்கு ஒரு முறை உங்கள் :போனிலிருந்து பாதுகாப்பான EU அமேசான் சேவையகத்திற்கு மாற்றப்படும், பின்னர் அது உங்கள் :போனிலிருந்து நீக்கப்படும். உங்கள் தரவு பாதுகாப்பான இ.யு அமேசான் சேவையகத்தில் முப்பது நாட்கள் வரை சேமிக்கப்படும் மற்றும் உங்கள் தரவு போலிபெயரிடப்பட்டு பெயரிடப்பட்ட ஆராய்ச்சியாளர்களுக்கு மட்டுமே வரையறுக்கப்பட்ட அணுகலுடன் யு.சி.எல் ஆய்வுக் குழு அதன் பாதுகாப்பான தரவு பாதுகாப்பு ஹேவனுக்கு தொடர்ந்து பதிவிறக்கம் செய்யும் . உங்கள் புவியியலுக்குரிய இருப்பிடத் தரவு யு.சி.எல் இன் உயர் நிபுணர் ஆராய்ச்சியாளர்களால் மற்றும் உங்கள் தனிப்பட்ட விவரங்களுக்கு அணுகல் இல்லாத குறிப்பிட்ட இ.எஸ்.ஆர்.ஐ பணியாளர்களால் மட்டுமே பகுப்பாய்வு செய்யப்படும். சுவாச நோய்த்தொற்றுகள் பரவுவது குறித்த ஆராய்ச்சியைத் தவிர வேறு எந்த நோக்கங்களுக்கும் தரவுகள் பயன்படுத்தப்படாது.

https://www.esriuk.com/en-gb/arcgis/products/tracker-for-arcgis/overview

https://trust.arcgis.com/en/

## வைரஸ் வாட்ச் ஆய்வு எவ்வளவு காலம் வரை நடக்கும்?

இந்த ஆய்வு அடுத்த ஆண்டு வசந்த காலம் வரை நடக்கும் (2021).

**பகுதி 1ஐப் படித்ததற்கு நன்றி.**

**அடுத்த பிரிவு அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளை விவரிக்கின்றது.**

**வயது வந்த பங்கேற்பாளர் தகவல் தாள் பகுதி - 2**

## அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

- **ஆய்வை நடத்துபவர்யார்**? மருத்துவ ஆராய்ச்சி கவுன்ஸில் மற்றும் தேசிய சுகாதார ஆராய்ச்சி நிறுவனம் இந்த ஆய்வுக்கு நிதியுதவி அளிக்கிறது. யு.சி.எல் இந்த ஆய்வின் ஸ்பான்சர். யு.சி.எல் இந்த ஆய்வின் தரவு கட்டுப்பாட்டாளர் (அதாவது, இந்த ஆய்வில் உருவாகும் அனைத்து தரவுகளுக்கும் பொறுப்புடையவர்). சர்வேக்கள், புவி கண்காணிப்பு தரவு மற்றும் ஆய்வக மாதிரிகள், ஆய்வக தரவுகள் மற்றும் இணைக்கப்பட்ட மருத்துவ பதிவுகளின் தரவு ஆகியவை இதில் உள்ளடங்கும்.

- **இந்த ஆய்வை யார் மறுஆய்வு செய்தார்கள்?** எந்த ஆய்வையும் நடத்துவதற்கு முன்னர், அது நன்னெறி குழுவினரால் மறுஆய்வு செய்யப்படவேண்டும். ஆய்வு நன்கு திட்டமிடப்பட்டுள்ளதா மற்றும் அதில் பங்கேற்பவர்களுக்கு அது நியாமானதாக உள்ளதா என்பதை அவர்கள் உறுதி செய்துகொள்வார்கள். அவர்கள் அதை பொதுமக்களின் பார்வையில் இருந்து பார்ப்பதுடன் ஆராய்ச்சியாளர்கள் பொருத்தமான விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணங்குவதை உறுதி செய்துகொள்கிறார்கள். இது ஒரு தேசிய ஆய்வு என்பதால் இது ஹேப்ஸ்டெட் ஆராய்ச்சி நன்நெறிக் குழுவினரால் மறுஆய்வு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளது- 20/எச் ஆர் ஏ/2320

- **நான் ஏன் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளேன்?** ஆய்வுக் குழுவில் அனைத்து வகையான மக்களும் இடம்பெற வேண்டும். இந்த ஆய்வு

இங்கிலாந்து மற்றும் வேல்ஸின் 9 பிராந்தியங்களிலும் நடத்தப்படுகிறது. உங்கள் பிராந்தியத்தில் உள்ள அஞ்சல் குறியீடுகளின் பட்டியலிலிருந்து உங்கள் பெயர் தற்போக்கான முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டது. உங்கள் வீட்டில் உள்ள அனைவரும் பங்கேற்க வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்.

- **நான் பங்கேற்கத் தான் வேண்டுமா?** இல்லை. பங்கேற்பதும் அல்லது பங்கேற்காமல் இருப்பதும் உங்களைப் பொறுத்த முடிவே ஆகும். இந்த ஆராய்ச்சியில் சிலர் ஈடுபட விரும்ப மாட்டார்கள் என்பதை நாங்கள் புரிந்துகொள்கிறோம்.

- **வீட்டில் உள்ள அனைவரும் ஏன் பங்கேற்க வேண்டும்?** இது முக்கியம், ஏனென்றால் COVID-19 மற்றும் சுவாசத்தை பாதிக்கும் மற்ற வைரஸ்கள் வீட்டில் உள்ளவர்களிடையே எவ்வாறு பரவுகின்றன என்பதை நாம் பார்க்கவேண்டும்.

- **எனக்கு ஆட்சேபணை இல்லை, ஆனால் வீட்டிலுள்ள மற்றவர் எவரேனும் பங்கேற்க விரும்பவில்லை என்றால் என்ன ஆகும்?** துரதிருஷ்டவசமாக எங்களுக்கு வீட்டிலுள்ள அனைவரும் பங்கேற்க தேவைப்படுவதால், நீங்கள் பங்கேற்க முடியாது.

- **நான் தனியாக வசிக்கிறேன் என்றால்?** அப்போது நீங்கள் பங்கேற்கலாம்.

- **என்னுடைய வீட்டில் 6 பேர்களுக்கு மேல் உள்ளனர் என்றால்?** துரதிருஷ்டவசமாக நீங்கள் பங்கேற்க முடியாது. இந்த ஆய்வுக்கான அதிகப்படியான குடும்ப நபர்கள் ஆறு ஆகும். ஒரு குடும்பம் என்பது ஒரே சமையலறையை, அல்லது வசிக்கும் / தங்கியிருக்கும் அறையை அல்லது உணவு உண்ணும் பகுதியை பகிர்ந்துகொள்ளும் ஒரு குழுமமான நபர்களை ( உறவினர்களாக இருக்கவேண்டும் என்பதில்லை) என்று நாங்கள் குறிப்பிடுகிறோம். மேலும் அவர்கள் வழக்கமாக அதே முகவரியில் வாரத்தில் 4 நாட்கள் அல்லது அதற்கு மேல் வசிக்கவேண்டும்.

- **எனது வீட்டில் இண்டர்நெட் வசதியோ அல்லது ஒரு ஸ்மார்ட் ஃபோன் வசதியோ ஏன் தேவைப்படும்?** பெரும்பாலும் நாங்கள் தகவல் சேகரிப்பை பாதுகாப்பான ஆன்லைன் சர்வே முறையில் வீட்டிலுள்ள நியமிக்கப்பட்ட வயதுவந்தவருடன் ( குடும்பத்தலைவர்) இ-மெயில் தொடர்பு கொள்வது மூலம் மேற்கொள்வோம். இது "நிகழ்நேரத்தில் / நேரலையில்" என்ன நடக்கிறது என்பதை அறிய உதவும், மேலும் இது காகித அடிப்படையிலான கேள்விப்பட்டியல்களைப் பயன்படுத்துவதை விட எளிதானது மற்றும் திறனுடையது. கேள்விப்பட்டியல்களை ஸ்மார்ட்போனில் பூர்த்தி செய்யலாம், ஆனால் கணினியில் பூர்த்தி செய்வது சுலபமாக இருக்கலாம்.

- **எனக்கு பணியில் இண்டர்நெட் இணைப்பு உள்ளது ஆனால் வீட்டில் இல்லை என்றால்?** நீங்கள் நோய்வாய்ப்பட்டிருக்கும்போது நாங்கள் உங்களிடமிருந்து தகவல்களை சேகரிக்க வேண்டும், பணியில் இருக்கும்போது அல்ல. அதனால்தான் உங்களுக்கு வீட்டு அல்லது மொபைல் போன் இண்டர்நெட் இணைப்பு தேவை.

- **நான் கர்ப்பமாக இருந்தால்?** இந்த ஆய்வில் சில கர்ப்பிணிகளை சேர்ப்போம் என்று எதிர்பார்க்கிறோம்.

- **எனக்கு ஏற்கனவே COVID-19 இருந்தது என்று நான் நினைத்தால்?** நீங்கள் இன்னமும் பங்கேற்கலாம். கோவிட் -19 க்கான நோய் எதிர்ப்பு சக்தி எவ்வளவு காலம் நீடிக்கும் மற்றும் பிற சுவாச வைரஸ்கள் எவ்வாறு பரவுகின்றன என்பதை அறிய நாங்கள் ஆர்வமாக உள்ளோம்.

- **ஆய்வில் ஈடுபடுவது எனக்கு கோவிட் -19 க்கான சோதனை அல்லது கோவிட் -19 க்கான ஒரு தடுப்பூசியை விரைவாக பெற உதவுமா?** இல்லை - இந்த ஆய்வு உங்கள் மருத்துவ சிகிச்சையை எந்த வகையிலும் பாதிக்காது. நீங்கள் பங்கேற்க தேர்வுசெய்தால், நீங்கள் நோய்வாய்ப்பட்டிருக்கும்போது நாசி / தொண்டை ஸ்வாப் மாதிரிகளை எங்களுக்கு அனுப்பவும், 2 இரத்த மாதிரிகள் எடுக்கவும் தேர்ந்தெடுக்கப்படலாம். COVID-19 உள்ளிட்ட பல்வேறு வகையான சுவாச வைரஸ்கள் மற்றும் இந்த வைரஸ்களுக்கான ஆண்டிபாடிகளுக்கான உங்கள் இரத்த மாதிரி ஆகியவற்றிற்கு

ஸ்வாப் சோதிக்கப்படும். இந்த முடிவுகளின் அர்த்தம் என்ன என்பதற்கான ஆலோசனையுடன் இந்த சோதனையின் முடிவுகள் உங்களுடன் பகிரப்படும்.

- **நான் விடுமுறைக்குச் சென்றுவிட்டால் என்ன ஆகும்?** நீங்கள் விடுமுறைக்கு சென்றுவிட்டால், தயவுசெய்து உங்கள் சர்வேக்களை உங்களால் முடிந்தவரை பூர்த்தி செய்யவும்.

- **நான் ஆய்வில் பங்கேற்பது இரகசியத்தன்மையுடன் இருக்குமா?** ஆம். எங்கள் சர்வேக்களில் நீங்கள் உள்ளிடும் அனைத்து தகவல்களும் நேரடியாக யு.சி.எல் (டேட்டா சேஃப் ஹேவன்) இல் உள்ள பாதுகாப்பான கணினிகளுக்குச் செல்லும். உங்களை அடையாளம் காண பயன்படுத்தக்கூடிய தனிப்பட்ட தரவுகளுக்கான அணுகல் யு.சி.எல் இல் குறைந்த எண்ணிக்கையிலான பயிற்சி பெற்ற ஆராய்ச்சியாளர்களுக்கு மட்டுமே அளிக்கப்படும். அடையாளம் காணும் தகவல்கள் (என்.ஹெச்.எஸ் எண்கள் மற்றும் பெயர்கள் போன்றவை) உங்கள் உடல்நலம், சோதனை முடிவுகள் அல்லது சர்வே மூலம் சேகரிக்கப்படும் வேறு எந்த தகவல்களிலிருந்தும் ஒரு தனி தரவுத்தளத்தில் வைக்கப்படுகின்றன. இந்த ஆய்வுத்திட்டத்தில் பணிபுரியும் அனைத்து பணியாளர்களுக்கும் தனிநபர்களைப் பற்றிய தனிப்பட்ட தகவல்களைப் பாதுகாக்க இரகசியத்தன்மையின் சட்டபூர்வமான கடமை உள்ளது. தரவுகளுடன் பணிபுரியும் அனைத்து பணியாளர்களும் தரவை ரகசியமாகவும் பாதுகாப்பாகவும் வைத்திருப்பதில் சிறப்பு பயிற்சி பெற்றிருக்கிறார்கள்.

அனைத்து தகவல்களும் தரவு பாதுகாப்பு சட்டத்திற்கேற்ப சேகரிக்கப்பட்டு சேமிக்கப்படும். குறைந்தபட்சம் 10 ஆண்டுகளுக்கு தரவை சேமிப்பதே யுசிஎல்-இன் கொள்கை ஆகும். **ஆய்வுகள் 3 மற்றும் 4 இல் பங்கேற்க உங்கள் வீட்டிலிருப்பவர்கள் அழைக்கப்பட்டால்** , உங்களைப் பற்றிய சில தகவல்களை நாங்கள் பகிர வேண்டியிருக்கலாம். இந்த தகவலில் உங்கள் பெயர், முகவரி, பிறந்த தேதி, பாலினம், மொபைல் தொலைபேசி எண் மற்றும்

மின்னஞ்சல் ஆகியவை உள்ளடங்கும். அவர்கள் உங்கள் மாதிரிகளை அடையாளம் கண்டு சோதிக்க முடியும் வகையில் மற்றும் உங்கள் சோதனை முடிவுகளை உங்களுக்கு தெரிவிக்க முடியும் வகையில் சுகாதார சேவைகள் ஆய்வகங்களுக்கு இந்த தகவல் தேவைப்படுகிறது. என்.ஹெச்.எஸ் ஆராய்ச்சி செவிலியர்கள் / தனியார் ஃபிளெபோடோமி நிறுவனத்திற்கு இரத்தம் எடுக்கும் வருகைகளை ஒழுங்கமைக்க இந்த தகவல் தேவைப்படும், மேலும் உங்கள் வீட்டுக்கு ஒரு ஆய்வு கிட் பேக்கைக் அமைத்து அனுப்ப லாஜிஸ்டிக்ஸ் நிறுவனத்திற்கு இந்த தகவல் தேவைப்படும். நடமாட்ட கண்காணிப்பு ஆய்வில் நீங்கள் பங்கேற்றால், யு.சி.எல் ஆய்வுக் குழு உங்கள் பெயர் மற்றும் மின்னஞ்சல் முகவரியை ஒரு சிறிய எண்ணிக்கையிலான பெயரிடப்பட்ட ஈ.எஸ்.ஆர்.ஐ பணியாளர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டியிருக்கலாம், அவர்கள் உங்கள் டிராக்கர் பயன்பாட்டுக் கணக்கை உருவாக்க யு.சி.எல் ஆய்வுக் குழுவுக்கு உதவுவார்கள்.

- **நடமாட்ட கண்காணிப்பு பயன்பாடான ஆர்க்ஜி.ஐ.எஸ் இலிருந்து நீங்கள் என்ன தகவலைப் பார்த்து பகுப்பாய்வு செய்வீர்கள்?** பகுப்பாய்வு செய்வதில் நாங்கள் ஆர்வமாக உள்ள தகவல்களில் பின்வரும் இடங்களில் ஒரு நாளைக்கு கழிக்கப்படும் நேரமும், தொற்றுநோய்க்கான ஆபத்தை அவை எவ்வாறு கணிக்கக்கூடும் என்பதும் உள்ளடங்கும். சில்லறை விற்பனை (ஷாப்பிங் சென்டர்கள், சூப்பர் மார்க்கெட்டுகள், கடைகள், சந்தைகள்), பொழுதுபோக்கு (எ.கா. தியேட்டர்கள், சினிமாக்கள்), சமூக இடங்கள் (எ.கா. பப்கள், பார்கள்), உணவு மற்றும் பானம் இடங்கள் (கஃபே உணவகங்கள்), பணி, வீடு, பொது போக்குவரத்து, நடத்தல், ஓட்டம், சைக்கிள் ஓட்டுதல், பூங்காக்கள், விளையாட்டு அரங்கங்கள் அல்லது இசை சார்ந்த இடங்கள் மற்றும் சுற்றுலா தலங்கள்.

**உள்ளூர் தரவு பாதுகாப்பு தனியுரிமை நோட்டீஸ்:**

இந்த ஆய்வுத்திட்டத்திற்கான கட்டுப்பாட்டாளர் லண்டன் பல்கலைக்கழக கல்லூரி இருக்கும் (யு.சி.எல்). தனிப்பட்ட தரவுகளை செயலாக்குவது சம்பந்தப்பட்ட யு.சி.எல் செயல்பாடுகளை யு.சி.எல் தரவு பாதுகாப்பு அதிகாரி மேற்பார்வை செய்கிறார் மற்றும் அவர் dataprotection@ucl.ac.uk இல் தொடர்பு கொள்ளப்படலாம்

உடல்நலம் மற்றும் கவனிப்பு ஆராய்ச்சி ஆய்வுகளில் பங்கேற்பாளர்களுக்கு யு.சி.எல் பங்கேற்பாளர் பற்றிய தகவலை எவ்வாறு பயன்படுத்துகிறது என்பது பற்றிய கூடுதல் தகவல்கள், க்ளிக் செய்க https://www.ucl.ac.uk/legal-services/privacy/ucl-general-privacy-notice-participants-and-researchers-health-and-care-research-studies

தரவு பாதுகாப்பு சட்டத்தின் கீழ் பங்கேற்பாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய தகவல்கள் (GDPR மற்றும் DPA 2018) ‘குறிப்பிட்ட இடத்துக்குரிய’ மற்றும் ‘பொதுவான’ தனியுரிமை நோட்டீஸ்கள் ஆகிய இரண்டிலுமே வழங்கப்படுகிறது. யு.சி.எல் இல் இந்த ஆய்விற்கான தனிப்பட்ட தரவை செயலாக்குவதற்கான சட்டபூர்வமான அடிப்படை உட்பிரிவு 6 (1) (இ) “பொது பணி” மற்றும் உட்பிரிவு 9 (2) ஜே “பொது நலன், அறிவியல் அல்லது வரலாற்று ஆராய்ச்சி நோக்கங்கள் அல்லது புள்ளிவிவர நோக்கங்களுக்காக காப்பகத்திற்கு செயலாக்கம் அவசியமாகிறது ”. ஆகியவற்றின் கீழ் வருகிறது. உங்கள் தனிப்பட்ட தரவு ஆராய்ச்சி ஆய்வுத்திட்டத்திற்கு தேவைப்படும் வரை செயல்படுத்தப்படும். நீங்கள் வழங்கும் தனிப்பட்ட தரவை அநாமதேயமாக்கவோ அல்லது போலி-அநாமதேயமாக்கவோ எங்களால் முடிந்தால் நாங்கள் இதை மேற்கொள்வோம், மேலும் முடிந்தவரையில் தனிப்பட்ட தரவின் செயலாக்கத்தைக் குறைக்க முயற்சிப்போம்.

உங்கள் தனிப்பட்ட தரவு எவ்வாறு செயலாக்கப்படுகிறது என்பது குறித்த கவலை உங்களுக்கு இருந்தால், அல்லது உங்கள் உரிமைகள் குறித்து எங்களை தொடர்பு கொள்ள விரும்பினால், data-protection@ucl.ac.uk இல் தயவுசெய்து யு.சி.எல் ஐ முதலில் தொடர்பு கொள்ளவும். உங்களுக்கு திருப்தி இல்லை என்றால், நீங்கள் தகவல் ஆணையரின் அலுவலகத்தை (ஐ.சி.ஓ) (https://ico.org.uk/concerns/handling/) தொடர்பு கொள்ள விரும்பலாம்.

## உங்கள் தகவல்கள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன என்பது குறித்த உங்கள் தேர்வுகள் என்ன?

- எந்தவொரு காரணத்தையும் தெரிவிக்காமல், எந்த நேரத்திலும் நீங்கள் ஆய்வின் ஒரு பகுதியாக இருப்பதை நிறுத்திக்கொள்ளலாம், ஆனால் எங்களிடம் ஏற்கனவே உள்ள உங்களைப் பற்றிய தகவல்களை நாங்கள் வைத்திருப்போம்.
- ஆய்வில் பங்கேற்பதை நிறுத்திக்கொள்ள நீங்கள் தேர்வுசெய்தால், மத்திய என்.எச்.எஸ் டிஜிட்டல் பதிவுகளிலிருந்து உங்கள் உடல்நலம் குறித்த தகவல்களைத் தொடர்ந்து சேகரிக்க விரும்புகிறோம். இது நடப்பதை நீங்கள் விரும்பவில்லை என்றால், எங்களிடம் சொல்லவும், நாங்கள் நிறுத்திவிடுவோம்.
- ஆராய்ச்சி நம்பகமானதாக இருக்க உங்கள் பதிவுகளை குறிப்பிட்ட வழிகளில் நாங்கள் நிர்வகிக்க வேண்டும். அப்படியென்றால், உங்களைப் பற்றி நாங்கள் வைத்திருக்கும் தரவைப் பார்க்கவோ மாற்றவோ உங்களை அனுமதிக்க முடியாது என்பதாகும்.
- இந்த ஆய்வில் பங்கேற்க நீங்கள் ஒப்புக்கொண்டால், இந்த ஆய்வில் இருந்து சேமிக்கப்பட்ட உங்கள் தரவைப் பயன்படுத்தி எதிர்கால ஆராய்ச்சியில் பங்கேற்க உங்களுக்கு விருப்பத்தேர்வு இருக்கும்.

## உங்கள் தகவல்கள் எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்பது பற்றி மேலும் எங்கு அறியலாம்?

உங்கள் தகவல்களை நாங்கள் எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பது பற்றி பின்வருவனவற்றின் மூலம் மேலும் அறியலாம்

- www.hra.nhs.uk/information-about-patients/
- எங்கள் ஆய்வு வலைத்தளம் www.ucl-virus-watch.net
- ஆராய்ச்சி குழுவில் ஒருவரைக் கேட்பதன் மூலம்
- ஆய்வு மேலாளருக்கு மின்னஞ்சல் அனுப்புவதன் மூலம் **viruswatch@ucl.ac.uk**

- **பங்கேற்பது குறித்து நான் என் மனதை மாற்றிக்கொண்டால் என்ன ஆகும்?** நீங்கள் எந்த கட்டத்திலும் ஆய்விலிருந்து விலகிக்கொள்ளலாம்.

- **பங்கு பெறுவதில் ஏதேனும் இடர்கள் அல்லது தீமைகள் உள்ளனவா?** பெரிய இடர்கள் எதுவும் இல்லை. சிலருக்கு கேள்விப்பட்டியலை பூர்த்தி செய்வது சிரமமாக இருக்கலாம் – நாங்கள் இவற்றை முடிந்தவரை எளிமையானதாக்க முயற்சித்துள்ளோம். மூக்கு மற்றும் தொண்டை ஸ்வாப் சோதனையில் எந்தவிதமான அசௌகரியமும் இல்லை, இருப்பினும் சிலருக்கு கொஞ்சம் திணறலாக இருக்கலாம். உங்கள் இரத்த மாதிரியை எடுத்துக்கொள்வது குறைந்தபட்ச அசௌகரியத்தை உள்ளடக்கலாம் மற்றும் சிலருக்கு ஒரு சிறிய சிராய்ப்பை ஏற்படுத்தக்கூடும். உங்கள் இரத்தத்தை எடுப்பதற்காக அனுபவம் வாய்ந்த உடல்நல கவனிப்பு நிபுணர்களை நாங்கள் பயன்படுத்துவோம்.

- **பங்கேற்பதன் சாத்தியமான பலன்கள் யாவை?** இந்த ஆய்வு உங்களுக்கு தனிப்பட்ட முறையில் பலனளிக்கும் என்று நாங்கள் உறுதியளிக்க முடியாது, ஆனால் தற்போதைய COVID-19 மற்றும் எதிர்காலத்தில் ஏற்படும் எந்தவொரு பரவும் தொற்றுநோயையும் எவ்வாறு கையாள்வது என்பதைத் திட்டமிடுவதற்கு எங்களுக்கு கிடைக்கும் தகவல்கள் மிக முக்கியமானதாக இருக்கும். நீங்கள் எங்கள் ஸ்வாபிங் ஆய்வின் ஒரு பகுதியாக இருந்தால், நீங்கள் COVID-19 நோயால் பாதிக்கப்பட்டுள்ளீர்களா என்பதை நாங்கள் உங்களுக்குத் தெரிவிப்போம். நீங்கள் இரத்த மாதிரிகள் வழங்கினால், COVID-19 ஆண்டிபாடி சோதனைகளின் முடிவுகளை உங்களுக்குத் தெரியப்படுத்துவோம்.

- **ஆராய்ச்சி ஆய்வு நிறுத்தப்படும்போது என்ன நடக்கும்?** ஆய்வில் என்ன கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்பதை நாங்கள் உங்களுக்குத் தெரியப்படுத்துவோம்.

- **எனக்கு இன்னமும் கேள்விகள் இருந்தால் என்ன செய்வது?** மேலும் உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் இருந்தால் தயவுசெய்து **viruswatch@ucl.ac.uk** க்கு மின்னஞ்சல் அனுப்பவும்.


- **ஆய்வு நடத்தப்படும் முறை குறித்து நான் மனநிறைவடையவில்லை என்றால் என்ன செய்வது?** பங்கேற்பவர்களுக்கு இந்த ஆய்வை முடிந்தவரை எளிதாக்க நாங்கள் முயற்சி செய்துள்ளோம், நீங்கள் கையாளப்பட்ட விதம் குறித்து உங்களுக்கு ஏதேனும் புகார் இருந்தால், அதற்கு தீர்வு காணப்படும். ஆய்வு நடத்தப்படும் விதம் குறித்து நீங்கள் புகாரளிக்க விரும்பினால், யு.சி.எல் தொற்றுநோயியல் மற்றும் பொது சுகாதாரத் துறை, 1-19 டோரிங்டன் பீ.எல்., ஃபிட்ஸ்ரோவியா, லண்டன் டபிள்யு.சி.1E 7எச்.பி என்ற முகவரியில் ஆய்வு மேலாளரைத் தொடர்பு கொள்ளவும் அல்லது viruswatch@ucl.ac.uk க்கு மின்னஞ்சல் அனுப்பவும். நீங்கள் இன்னமும் மனநிறைவற்றவராகவே இருந்தால், யு.சி.எல் நன்நெறிக் குழு விடம் உங்கள் புகாரை எழுப்பலாம்: ethics@ucl.ac.uk மற்றும் பின்வரும் முகவரிக்கு நகல் அனுப்பவும் research-incidents@ucl.ac.uk.

- **தீங்கு:** பங்கேற்பதன் மூலம் நீங்கள் காயமடையும் சாத்தியம் இல்லையென்றாலும், அவ்வாறு நிகழ்ந்தால் இழப்பீடு கிடைக்கக்கூடும், ஆனால் உங்கள் சட்ட செலவுகளை நீங்கள் செலுத்த வேண்டியிருக்கும். ஸ்பான்சருடைய (லண்டன் பல்கலைக்கழக கல்லூரி) கவனக்குறைவின் விளைவாக இந்த காயம் ஏற்பட்டதாக நீங்கள் சந்தேகித்தால், நீங்கள் இழப்பீடு கோரலாம். மருத்துவ சோதனை / ஆய்வுக்கான தலைமை ஆய்வாளராகவும், யு.சி.எல் 1-19 டோரிங்டன் பிளேஸில் இருக்கும் பேராசிரியர் ஆண்ட்ரூ ஹேவர்டுக்கு எழுத்துப்பூர்வமாக உரிமை கோரவும். தலைமை ஆய்வாளர் பின்னர் உரிமைகோரலை ஸ்பான்சருக்கும் ஸ்பான்சரின் காப்பீட்டாளர்களுக்கும் அனுப்புவார். மேலும், சாதாரண தேசிய சுகாதார சேவை புகார்கள் வழிமுறைகள் உங்களுக்கு இன்னமும் கிடைக்கும் (பொருத்தமானது என்றால்).


- **ஆராய்ச்சி ஆய்வின் முடிவுகளுக்கு என்ன ஆகும்?** நீங்கள் எங்களுக்கு அனுப்பிய மாதிரிகள் தொடர்பான எந்தவொரு COVID-19 சோதனை முடிவுகளும் உங்களுக்கு திருப்பித் தரப்படும். வழக்கமான செய்திமடல் வழியாகவும் எங்கள் ஆய்வு முடிவுகளை உங்களுக்கு அப்டேட் செய்ய விரும்புகிறோம். பரவும் தொற்றுநோய்களுக்கான தற்போதைய மற்றும் எதிர்கால பதிலைத் திட்டமிட ஆய்வு முடிவுகள் என்.எச்.எஸ் மற்றும் பொது சுகாதார இங்கிலாந்து COVID-19 மறுமொழி குழுக்களுடன் பகிரப்படும். ஆய்வு முழுவதும் இ.எஸ்.ஆர்.ஐ ஆர்க் ஜி.ஐ.எஸ் ஆல் வழங்கப்படும் ஆன்லைன் டாஷ்போர்டில் ஆய்வு முடிவுகளின் பகுப்பாய்வுகளை வாரந்தோறும் வெளிப்படையாக செய்வோம். ஆய்வு முடிவுகள் அறிவியல் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும் மற்றும் அறிவியல் கூட்டங்களில் வழங்கப்படும். இந்த பிரசுரங்களில் அல்லது வலைத்தளங்களில் நீங்கள் அடையாளம் காணப்பட மாட்டீர்கள்.

- **எனது உடல் வடிவ வகையை எவ்வாறு தேர்வு செய்வது?** உங்கள் உயரம் மற்றும் எடை உங்களுக்குத் தெரியாவிட்டால் மற்றும் உங்களிடம் அளவிடும் டேப் மற்றும் அளவை இல்லை என்றால், கீழே உள்ள விளக்கப்படத்தைப் பயன்படுத்தி உங்கள் உடல் வடிவத்தைத் தேர்ந்தெடுக்கலாம். அடிப்படை சர்வேக்கு இது உங்களுக்குத் தேவைப்படும் என்பதால் தயவுசெய்து இதை குறித்து வைத்துக்கொள்ளவும்.

Which shape looks most like you? Men




Which shape looks most like you? Women




**வைரஸ் வாட்சில் பங்கேற்பதைக் கருத்தில் கொண்டதற்கு நன்றி.**